# TAMILNADU POLLUTION CONTROL BOARD

## MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED CLUSTER ROUGH STONE AND GRAVEL QUARRIES M/S ULTRA READY MIX CONCRETE ROUGH STONE AND GRAVEL QUARRY OVER AN EXTENT OF 2.94.01 HA AT S.F. NOS: 168/2A PART, 168/28B PART, 169/1C PART, 169/2A PART EDAYARPALAYAM VILLAGE, SULUR TALUK, COIMBATORE DISTRICT AND THIRU. N.KATHIRESAN ROUGH STONE AND GRAVEL QUARRY OVER AN EXTENT OF 1.42.82 HA AT S.F. NOS: 172/1B, 172/2 & 173/2A2, EDAYARPALAYAM VILLAGE, SULUR TALUK, COIMBATORE DISTRICT COVERING OVERALL EXTENT OF 4.36.83 HA ON 22.08.2024 AT 11.00 A.M AT M/S SUYA UTHAVI KULU KOOTAMAIPPU KATTIDAM, PACHAPALAYAM PANCHAYAT, PERIYAQUILI, SULTANPET PANCHAYAT UNION , COIMBATORE DISTRICT.

**Name of the Project:**

Proposed cluster Rough Stone and Gravel Quarries (2 Nos.) at Edayarpalayam Village, Sulur Taluk, Coimbatore District covering overall extent of 4.36.83 Ha.

| | |
|---|---|
| 1) **M/s ULTRA READY MIX CONCRETE ROUGH STONE AND GRAVEL QUARRY** over an extent of 2.94.01 Ha at S.F. Nos: 168/2A Part, 168/28B Part, 169/1C Part, 169/2A Part, Edayarpalayam Village, Sulur Taluk, Coimbatore District | Proposed Rough Stone & Gravel quarry over an extent of 2.94.01 Ha. |
| 2) **Thiru. N.KATHIRESAN ROUGH STONE AND GRAVEL QUARRY** over an extent of 1.42.82 Ha at S.F. Nos: 172/1B, 172/2 & 173/2A2, Edayarpalayam Village, Sulur Taluk, Coimbatore District | Proposed Rough Stone & Gravel quarry over an extent of 1.42.82 Ha. |

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.R.Palanikumar | : | **District Revenue Officer/**<br>**Senior Regional Manager,**<br>Tamilnadu Civil Supplies Corporation<br>Coimbatore District |

| | | | |
|---|---|---|---|
| 2 | Dr.R.Chandrasekaran | : | **District Environmental Engineer**,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 3. | Thiru.J.Sathesh | : | **Assistant Environmental Engineer**,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 4. | Thiru.M.Sheik Nawas | : | EIA Consultant<br>M/s GEO Exploration and Mining Solutions, Salem. |
| 5. | Public | : | 88 Nos. (List enclosed as Annexure) |

*********

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South welcomed the District Revenue Officer/Senior Regional Manager, Tamilnadu Civil Supplies Corporation, Coimbatore District all general public and project proponents who are attending the public hearing for the Proposed Rough Stone & Gravel Quarries (2 Nos) at Edayarpalayam Village, Sulur Taluk, Coimbatore District covering overall extent of 4.36.83 Ha namely **1) M/s ULTRA READY MIX CONCRETE ROUGH STONE AND GRAVEL QUARRY** over an extent of 2.94.01 Ha at S.F. Nos: 168/2A Part, 168/28B Part, 169/1C Part, 169/2A Part, Edayarpalayam Village, Sulur Taluk, Coimbatore District; **2) Thiru. N.KATHIRESAN ROUGH STONE AND GRAVEL QUARRY** over an extent of 1.42.82 Ha at S.F. Nos: 172/1B, 172/2 & 173/2A2, Edayarpalayam Village, Sulur Taluk, Coimbatore District; It is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF&CC), Government of India for 8 type of projects including quarry after conducting Public Hearing. He added that the press release informing the conducting of Public Hearing was published in **"Dinamalar"** and **"The Hindu"** dated 11.07.2024 and also pointed out the EIA report and Executive summary are made available for public reference at respective Offices and pamphlets have been distributed to public regarding the public hearing. He also informed that the project consultant on behalf of project proponent would make a presentation on the proposed project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography/ Audio and

the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

District Revenue Officer/Senior Regional Manager, Tamilnadu Civil Supplies Corporation, Coimbatore District has initiated the Public Hearing process and requested the project consultant to explain about their proposed project through power point presentation and requested the public to register views related to Environment.

Thereafter, Thiru.M.Sheik Nawas, EIA Consultant, M/s Geo Exploration and Mining Solutions, Salem, Tamilnadu of the proposed project has made presentation about the proposed project to the public along with Environmental Management Plan.

Then, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has invited the public to express their views and comments about the proposed Project. The views and suggestions of the public are detailed below:

1. **Mr.Manikkaraj, Idayarpalayam**

My name is Manikkaraj. Our land is next to the quarry. I don't have objection for granting the license to the quarry. We will get employment opportunities.

2. **Mr.Vijayakumar, Bogampatti**

My name is Vijayakumar. I am from Bogampatti Village. I am work as a driver. If license was granted to this quarry, I will get employment opportunities. Thank you. Greetings.

3. **Mr.Gopalakrishnan**

My name is Gopalakrishnan. I am working as a driver. It is difficult for our livelihood and we are without job for more than 4-5 months. The drivers and laborers are also suffering. If license was granted to this quarry, we will get employment opportunities. It will be helpful for our livelihood.

4. **Mr. Prabhu, Idayarpalayam**

My name is Prabhu. We don't have employment as the quarries was not operated for four months. The crusher also was not operated. Therefore, if licence is granted to this quarry, I will get employment opportunities.

5. **Mr. Marudachalam, Karacherry**

My name is Marudachalam. I have been supplying construction materials to Coimbatore with trucks. It would be very beneficial, if license will be granted to quarry. The construction materials will also be available easily. I request to grant license.

6. **Mr. Mugilan, Tamil Nadu Environment Protection Movement**

The Coimbatore District Administration and the Tamil Nadu Pollution Control Board, Coimbatore South is jointly conducting the public hearing for Ultra Readymix Concrete Company's quarry which is to be set up in an area of 7½ acres & Kathiresan quarry which is to be set up in an area of 3½ acres in Idayarpalayam Village, Sulur Taluk, Coimbatore District. On behalf of the Tamil Nadu Environmental Protection Movement and the Anti-Illegal Quarry Movement. I extend my greetings and best wishes to the Chairman of the Public hearing meeting our esteemed District Revenue Officer, the District Environmental Engineer who is presiding the meeting, the various departmental officials who are participating including the Pollution Control Board officials, the police, the journalists, the public who have come here to express their views, the social activists, the members of the Tamil Nadu Farmers' Protection Association, the quarry owners, people brought by the owners, the farmers, and those with social concerns and everyone who is participating in various ways. Before I start speaking at this public hearing meeting, I would like to pay our respects to the two workers who died in an explosion at Tukanayakkanpalayam in Erode due to illegal quarrying activity. This meeting is not to decide based on voting whether to have a quarry or not. The project consultant of the company that designed the project for the quarry owners also presented before us. As shown in the picture, the operation of this quarry will cause severe air, water, soil and noise pollution and will affect not only humans but also the livestock, animals, birds, reptiles, plants and trees here. This meeting is to tell us what kind of damage is being caused by quarry and how they are going to fix those damages and see if they can fix them on that basis. 100 people are in favour of this quarry. It is not that one person is opposing against it. The consultant says that they have carried out survey for three months based on technical and legal basis to find out whether all those damages can be corrected. On that basis, they have given their opinions in a draft EIA report of almost 400 pages. I am presenting my opinion from that report. Generally, the basis for the consultation meeting is the law book called "Minor Mineral Concession Rules 1959". It says how far a house inhabited by humans, a temple, an electricity connection, a windmill and a worker's residence should be from the quarry. Importantly, this rule also talks about safe blasting while the quarry is operating. Rule No. 36/1A says that quarry lease should not be granted within a radius of 300 meters from a residential area. The Village Administrative Officer says that there are many houses in 173/1A within 50 meters. All of them are unauthorized houses. If there are authorized houses either they registered in village map, FMB, A-Registration or obtained Panchayat

approval or DTCP approval. In this regard, in the report received on 15.07.2024 from the Land Survey Laboratory located in Tamilnadu under the Right to Information Act, if the house registered in the UDR and Natham land survey field map is in demolished or dilapidated condition, it may be treated as the house. There is no village map for this quarry. There have given topo sketch only. The District Environmental Engineer intervened and asked to complete his narration quickly and to tell number of houses with its location. The location of the quarry in the computer map of Ultra Readymix Company is mentioned as 168/2-A Part, 168/2B Part. It should not be mentioned as a part. It should be subdivided and provided. A house is located 30 meters away in field number 138 on the northern side. If there is a house, the quarry approval should not be given. It is shown in the FMB given by the Village Administrative Officer. Next in the field number 178-1 shows that there are 2 houses at a distance of 200 meters on north-west of this quarry. When we checked if there are houses on Google Maps, there are 6 houses. These houses are shown on Google Maps at 189 meters on the west side, 167 meters on the east side, 23 meters on the north side, 130 meters on the south side, 51 meters and 127 meters. As it violates the legal regulations, permission should not be given to this quarry as per the law. No temporary or permanent labour quarters is allowed within 300m from M/s Ultra Ready Mix Quarry. But, at present there are many quarters. There are also some wind mills. As per Electricity Act 1956, section 83/2, there shall not be any electric connection, electricity wire, HT line, transformer within 300 meters from this quarry, since public and domestic animals are being affected. There are two wind mills on Eastern Direction and one wind mill on Southern Direction. Hence no permission shall be granted as per law. SEIAA has granted permission for TOR on 10.10.2023 to carry out Air, Water, Soil and Noise survey. But survey was conducted between 01.12.2022 to 28.02.2023 i.e 70 days before obtaining permission. It is legally wrong. As per rule, 6 wheel vehicle can carry 18 Tons, 10 wheel can carry 28 Tons, 14 wheel can carry 48 Tons. If they found a ton load in excess fine of Rs.20,000 will be imposed as per rule. But in village roads, lorries with 90 Tons are being operated. Approximately 20% of income from public tax is being spent for laying and maintaining of NH, SH and village roads. Life span of roads is 8 years in normal condition, but they have been damaged within three months. Public tax amount has been spent for earning money by one man. There is no protection to quarry workers. There is no ESI, PF and Insurance to them. An amount of Rs.20 lakhs have been awarded to the affected quarry labour through our struggle/efforts. No permission shall be granted to Ultra Ready Mix Quarry as there are wind mills and labour quarters as per google map. Next, the Kathiresan

quarry will be located at 172 and 173. There is a house at a distance of 270 meters on the southern direction. 250 meters on the south-west side, 60 meters on the north-west side in S.F No.174, and houses in field number 173-1, 192-A, and 194-A on the northern direction. There is a Perumal temple at 30 meters adjacent to the quarry in field number 164. There are also houses in the eastern part. There is a house in 280-E, 223A on the western side and approved houses in field 168, 178, 174, 173, 208, 164, and 190 belongs to the quarry. Google Maps shows that there are houses in fields 163, 169, and 191 on the west side. There are a total of 11 houses at 25 & 29 meters in the north, 281 & 192 meters in the east, 191 meters in the northwest, 124 & 207 meters in the south and 193 meters in the west. There are houses and residential plots in all the fields. 1 wind mill is located in the west and 1 wind mill is located in the northeast as shown in document 209-A. The Village Administrative Officer has certified that there is an electricity line at 20 meters on the western side. If there is an electricity line, quarry work should be done only 50 meters away. The Government should monitor whether this is the case in practice. There are workers quarters, windmills, electricity line, etc. and also various violations. There are approved houses and residential plots in field numbers 168, 174, 175, 208, 164, 190. In the FMB, VAO report, village map, computer map, Google map it is depicted that temporary workers quarters are within a radius of 300 meters. The Village Administrative Officer has certified that the proposed highway is located at 100 meters on the northern side of this quarry. Since there are so many violations where this quarries to be located, it is wrong to operate this quarry legally. I humbly request that permission should not be given to Ultra Readymix Company and Kathiresan Quarry in Idayarpalayam, for which public hearing meeting is being conducted.

7. **Mr.Thiagarajan, Karacherry**

My name is Thiagarajan. I am carrying out lorry business. I have studied diploma and did not find a suitable job for my studies. I earn money only when lorry is operated. If license is being issued to this quarry it will be beneficial for so many families and will improve their livelihood.

8. **Mr.Hari, Karacherry**

My name is Hari. I live in a village in Karacherry. I am running a lorry business. If you give us a license for this quarry, we will get work. So please give us permission.

9. **Mr. Sakthivel, Periyakuiyli**

Greetings to all. My name is Sakthivel. I have just completed my degree. I have been struggling for a year without getting a suitable job despite being selected in the campus

interview. If license was granted to this quarry, I will start truck business. If go to job also I may get a salary of Rs. 10000 to 12000 only. In the current situation, I cannot support my family with the above salary. So, I have to do part time job to earn more income. Therefore, I humbly request you to grant permission for this quarry. It will be beneficial for us.

**10. Mr.Saran, Periyakuiyli**

Hello everyone. My name is Saran. I own lorry. Rough stone is not available in the Idayarpalayam and Ponnagani areas. We have to go far away to get rough stone. Due to the low supply of rough stone, crusher material is not available properly in this area. There is also shortage of raw material for the crusher. If permission was granted, our livelihood will be better.

**11. Mr.Venkatachalam, Pachapalayam**

My name is Venkatachalam. I am living near the quarry in Pachapalayam village. I have a compressor spare parts shop. Our livelihood depends on this quarry. We rely on the quarry to run business and earn from it. Some people from outside say that license should not be given to the quarry. The quarrying industry is being carried out here as per the rules and regulations. If license was granted to this quarry, it will create jobs and also help us to improve our livelihood. Opportunity should be given to speak only for a limited time for everyone. Thank you all.

**12. Mr.Saravanan, Idayarpalayam.**

My name is Saravanan. My residence is near to this quarry. I request to give license to this quarry. It will be very helpful for us. Our livelihood depends on it.

**13. Mr. Sathyamoorthy, Chettipalayam**

Hello everyone. My name is Sathyamoorthy. I am from Chettipalayam. A few years ago, the Tamil Nadu Government issued an order. Mining of River sand was banned, because it was harmful to water bodies, so instead M-sand may be used for which the raw material is available from stone quarries. It is very difficult to get permission for stone quarrying. If there is a delay in granting permission for stone quarrying, production of rough stone decreases. Due to the decrease in raw material production, the demand for the rough stone increases. Hence, price increase is inevitable. Coimbatore District had textile industry as an important industry. Today, there are many families who depend on the construction industry. The basic raw material (M-sand, P-sand, jelly, gravel) for the construction industry is available from stone quarries. Due to the unavailability of raw material during the construction of houses and large factories, many workers lose their jobs. Once upon a time, construction workers worked 6 to 7 days a

week. Due to shortage of raw materials and price hike, job opportunities have decreased. The situation has changed now. The livelihood of the younger generation who depend on this quarry is questionable. They earn income through the quarrying industry and feeding their families. Construction workers have no other opportunities. Mr.Mukilan, who fought against the wind mill earlier, today speaks against the quarry and now in favor of the wind mill. There are many workers depends on this quarry. Each worker owns a truck. From the truck business, they engage in spare parts and also in the construction industry. Since there are more job opportunities, I request you to grant permission for this quarry.

**14. Mr. Mahendran**

My name is Mahendran. I am working in the construction industry. When the quarry was operating, I was getting job 6 days a week. Since the quarries are not operating, it is difficult to get job 3 days a week. Due to the short supply of rough stone, we are in a situation to search suitable job everywhere and return without job. Therefore, I request you to grant permission for the stone quarry as soon as possible.

Total nos. of petitions received: 2 (Two)

Thiru.J.Sathesh, AEE delivered vote of thanks.

List of public attended the public hearing meeting along with photographs and CD/pendrive recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | |
|---|---|
| District Environmental Engineer<br>Tamilnadu Pollution Control Board<br>Coimbatore South. | District Revenue Officer/<br>Senior Regional Manager,<br>Tamilnadu Civil Supplies Corporation<br>Coimbatore District |

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

கோவை மாவட்டம், சூலூர் வட்டம், இடையர்பாளையம் கிராமம், க.ச.எண். 168/2ஏ பகுதி, 168/28பி பகுதி, 169/1சி பகுதி, 169/2ஏ பகுதி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். அல்ட்ரா ரெடிமிக்ஸ் கான்கிரீட் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி மற்றும் க.ச.எண். 172/1 பி, 172/2 & 173/2ஏ2 திரு. என். கதிரேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி. இத்திட்டமானது சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஒன்றியம், பச்சாபாளையம் ஊராட்சி, பெரியகுயிலியில் அமைந்துள்ள சுய உதவிக் குழு கூட்டமைப்பு கட்டிடத்தில் 22.08.2024 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்புக்கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.

**<u>திட்டத்தின் பெயர்</u>**

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பச்சாபாளையம் கிராமத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள

1. தி/ள். அல்ட்ரா ரெடிமிக்ஸ் கான்கிரீட் பிரைவேட் லிமிடெட் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, 2.94.01 ஹெக்டர் பரப்பளவில் , க.ச.எண், 168/2ஏ பகுதி, 168/28பி பகுதி, 169/1சி பகுதி , 169/2ஏ பகுதி
2. திரு. என்.கதிரேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, 1.42.82 ஹெக்டர் பரப்பளவில் க.ச.எண். 172/1பி, 172/2 & 173/2ஏ2.

**<u>பங்கேற்றோர்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. R. பழனிகுமார் | : | மாவட்ட வருவாய் அலுவலர்/சீனியர் மண்டல மேலாளர்<br>தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2. | Dr. R. சந்திரசேகரன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் தெற்கு |

| | | | |
|---|---|---|---|
| 3. | திரு. J. சதீஷ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>கோயம்புத்தூர் தெற்கு |
| 4. | திரு. M. ஷேக்நவாஸ் | : | திட்டஆலோசகர்,<br>ஜியோ எக்ஸ்புளரேசன் மற்றும் மைனிங் சொல்யுசன்ஸ்,<br>சேலம், தமிழ்நாடு |
| 5. | பொதுமக்கள் எண்ணிக்கை | : | 88 |

கோயமுத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், இடையர் பாளையம் கிராமம், க.ச.எண். 168/2ஏ பகுதி, 168/28பி பகுதி, 169/1சி பகுதி , 169/2ஏ பகுதி உத்தேசிக்கபட்டுள்ள அல்ட்ரா ரெடிமிக்ஸ் கான்கிரீட் பிரைவேட் லிமிடெட் மற்றும் க.ச.எண். 172/1பி, 172/2 & 173/2ஏ2 உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. என். கதிரேசன் ஆகியோரிகளின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டமானது மொத்த பரப்பளவு 4.36.84 ஹெக்டர்ஸ் ஆகும். இக்குவாரி திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பொதுமக்களையும் மற்றும் குவாரி உரிமையாளர்களையும், கோவை மாவட்டம், கோயமுத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 2006-ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் படி 8 வகையான தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறவேண்டும் என்பது அவசியம் என்றும், அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும்போது பொதுமக்களின் கருத்துக்களை கேட்டு அதை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பது விதியாகும். அதன்படி இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர்" மற்றும் "தி இந்து" ஆகிய நாளிதழ்களில் 11.07.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும்

தேவையான அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார். மேலும், இந்த கூட்டம் நடைபெறவுள்ள தகவலை கிராமத்திலுள்ள முக்கியமான இரண்டு இடங்களில் விளம்பர பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொதுமக்களிடம் வழங்கபட்டுள்ளது. இதனுடைய புகைப்படங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தைப் பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துகளை பதிவு செய்யுமாறும், இவையனைத்தும் ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். அவர் பொது மக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்மந்தமான கருத்துக்களை பதிவு செய்வது இக்கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகள் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. M. ஷேக் நவாஸ், ஜியோ எக்ஸ்புளரேசன் மற்றும் மைனிங் சொல்யுசன்ஸ், சேலம், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது

மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர். ஆலோசனைகளை தெரிவித்தனர்.

<u>பொது மக்கள் கருத்துக்கள்</u>

1. <u>திரு. மாணிக்கராஜ், இடையர்பாளையம்.</u>

என் பெயர் மாணிக்கராஜ். எங்கள் தோட்டம் குவாரிக்கு அருகில் உள்ளது. லைசென்ஸ் கொடுப்பதில் எந்த ஆட்சேபணையும் இல்லை. எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

2. <u>திரு. விஜயகுமார், போகம்பட்டி</u>.

என் பெயர் விஜயகுமார். நான் போகம்பட்டி பகுதியைச் சார்ந்தவன். நான் டிரைவர் வேலை செய்கிறேன். இந்த கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுத்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும். நன்றி. வணக்கம்.

3. <u>திரு. கோபாலகிருஷ்ணன்</u>

என் பெயர் கோபாலகிருஷ்ணன். நான் டிரைவர் வேலை செய்கிறேன். 4, 5 மாதங்கள் வேலை இல்லாமல் சிரமமாக இருக்கிறது. டிரைவர் மற்றும் கூலித்தொழிலாளர்களும் கஷ்டப்படுகிறார்கள். இந்த கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுத்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும். உதவியாக இருக்கும்.

4. **திரு. பிரபு, இடையர்பாளையம்**

என் பெயர் பிரபு. நான்கு மாதங்கள் குவாரிகள் இயங்காததால் வேலை வாய்ப்பு இல்லை. கிரஷர் அதிகமாக ஓடுவதில்லை. ஆகவே, இந்த குவாரிக்கு லைசென்ஸ் கொடுத்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

5. **திரு. மருதாச்சலம், காரச்சேரி**

என் பெயர் மருதாச்சலம். நாங்கள் டிப்பர் லாரி வைத்து கோயம்புத்தூருக்கு பில்டிங் மெட்டீரியல் சப்ளை செய்து வருகிறோம். இந்த குவாரிக்கு லைசென்ஸ் கொடுத்தால் மிகவும் உபயோகமாக இருக்கும். கட்டுமானப் பொருள் சீக்கிரமாக கிடைக்கும். ஆவண செய்ய வேண்டும்.

6. **திரு. முகிலன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம்.**

கோவை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கும் இணைந்து நடத்தும் கோவை மாவட்டம், சூலூர் வட்டம், இடையர்பாளையம் கிராமத்தில் அமையவுள்ள அல்ட்ரா ரெடிமிக்ஸ் கான்கிரீட் நிறுவனத்தின் 7½ ஏக்கர் பரப்புள்ள உள்ள குவாரிக்கும், கதிரேசன் அவர்களுடைய 3½ ஏக்கர் பரப்பிலான குவாரிக்கும் அமைய இருக்கக்கூடிய கருத்துக் கேட்புக் கூட்டத்தினுடைய தலைவர் பெருமதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், இந்த கூட்டத்தை முன்னிலை வகித்து நடத்திக் கொண்டிருக்கிற மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் இங்கே பங்கெடுத்துக் கொண்டுள்ள மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகளுக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும் மற்றும் உள்ளூர் பொது மக்களுக்கும் மற்றும் கல் குவாரி உரிமையாளர்களுக்கும், உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டவர்களுக்கும், விவசாய மக்களுக்கும், சமூக அக்கறை உள்ளவர்களுக்கும் நாங்கள் சார்ந்திருக்கின்ற தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கல் குவாரி கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நான் பேச

தொடங்கும் முன்பு, சட்ட விரோதமான குவாரி இயக்கத்தால் வெடி வெடித்து பலியான ஈரோடு, தூக்கநாயக்கன்பாளையத்தில் இறந்த அந்த இரண்டு தொழிலாளர்களுக்கும் எங்களுடைய அஞ்சலியை செலுத்திக் கொள்கிறோம். இந்த கூட்டமென்பது குவாரி வேண்டும் அல்லது வேண்டாம் என்று சொல்வதற்கான ஓட்டு போடும் மாதிரியான கூட்டம் அல்ல இந்த கூட்டத்தை பொறுத்தவரை எனக்கு முன்பு திட்டத்தை குவாரி உரிமையாளர்களுக்காக வடிவமைத்த நிறுவனத்தை சேர்ந்தவரும் பேசினார்கள். அதை இங்கே நமக்கு படத்தில் காட்டியது போல இந்த குவாரி இயங்குவதால் கடுமையான காற்று, நீர், மண் மற்றும் ஒலி மாசு ஏற்படும் மற்றும் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் இங்கே உள்ள கால்நடை, விலங்குகள், பறவைகள், ஊர்வன மற்றும் தாவரங்கள், மரங்களுக்கெல்லாம் பாதிப்பு ஏற்படும். இங்கே என்னென்ன பாதிப்புகள் ஏற்படுவது என்பதையும் அந்த பாதிப்புகளை எப்படி சரி செய்வோம் என்பதையும் சொல்லி அந்த அடிப்படையில் அவர்களால் சரி செய்ய முடியுமா என்பதற்காகத்தான் இந்த கூட்டம். இக்கூட்டத்தை 100 பேர் ஆதரித்து பேசுகிறார்கள். ஒருவர் எதிர்த்து பேசுகிறார் என்பது அல்ல. தொழில்நுட்ப அடிப்படையில் இவர்கள் சொல்லக்கூடிய சட்ட அடிப்படையில் 3 மாதம் எல்லாவற்றையும் ஆய்வு செய்ததாக நிறுவனம் சொல்லுகிறது. அந்த அடிப்படையில் அந்த பாதிப்புகளையெல்லாம் சரி செய்ய முடியுமா என்பதை கேட்டு அறியும் கூட்டம். அந்த அடிப்படையில் கருத்துகளை கிட்டத்தட்ட 400 பக்க அறிக்கைகளாக கொடுத்து இருக்கிறார்கள். அந்த அறிக்கையிலிருந்து என்னுடைய கருத்தை முன் வைக்கிறேன். பொதுவாக கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு அடிப்படை என்பது "சிறு கனிம சலுகை விதிகள் 1959" என்கின்ற சட்ட புத்தகம். குவாரி அமைகின்ற இடத்திலிருந்து மனிதர்கள் குடியிருக்கும் வீடு, கோவில், மின் இணைப்பு, காற்றாலை மற்றும் தொழிலாளர் குடியிருப்பு ஆகியவை எவ்வளவு தூரம் இருக்க வேண்டும் என்பதை சொல்கிறது. முக்கியமானது என்னவென்றால், குவாரி இயங்கும் போது பாதுகாப்பாக வெடி வைப்பது பற்றியும் இப்புத்தகம் சொல்கிறது. குடியிருப்பு பகுதியிலிருந்து

300 மீட்டர் சுற்றளவிற்குள் கல் குவாரி குத்தகை வழங்கக்கூடாது என்பதை பற்றி விதி எண். 36/1A சொல்கிறது. கிராம நிர்வாக அலுவலர் சொல்கிறார் 50 மீட்டர் தூரத்தில் 173/1ஏ- ல் வீடுகள் நிறைய இருக்கிறது. அவையெல்லாம் அங்கீகரிக்கப்படாத வீடுகள். அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் என்றால் கிராம வரைபடம், FMB, அ-பதிவேடு அல்லது பஞ்சாயத்து ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும் அல்லது DTCP ஒப்புதல் கொடுத்திருப்பார்கள். இது சம்மந்தமாக தமிழ்நாட்டில் அமைந்துள்ள நில ஆய்வு ஆய்வகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டு 15.07.2024 அன்று பெற்ற அறிக்கையில் UDR மற்றும் நத்தம் நில அளவை புல வரைபட பதிவேட்டுகளில் பதியப்பட்ட வீடு இடிந்திருந்தாலோ அல்லது சிதலமடைந்திருந்தாலோ அந்த வீடு ஆரம்ப நிலையில் எவ்வாறு பதியப்பட்டிருந்ததோ அவ்வாறு அமையும். இக்குவாரிக்கு கிராம வரைபடம் இல்லை. TOPO ஸ்கெட்ச் மட்டும் உள்ளது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் உரையை சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். எந்த வீடுகள் எந்தெந்த பகுதிகளில் இருக்கிறது என்பதை மட்டும் சொல்லுங்கள் அதை பதிவு செய்து கொள்ளலாம் என்று கூறினார்கள். அல்ட்ரா ரெடிமிக்ஸ் நிறுவனத்தினுடைய கணினி வரைபடத்தில் குவாரி அமையக்கூடிய இடம் 168/2-ஏ Part, 168/2பி Part என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பகுதி என்று குறிப்பிடக்கூடாது. உட்பிரிவு செய்து வழங்க வேண்டும் என்று கூறினார். வடக்குப்புறத்தில் புல எண் 138-ல் ஒரு வீடு 30 மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கிறது. வீடு இருந்தால் குவாரி அமையக்கூடாது. கிராம நிர்வாக அலுவலர் அனுப்பி இருக்கிற FMB-ல் காட்டப்பட்டிருக்கிறது. அடுத்து, 178-1 இந்த குவாரினுடைய வடமேற்குப் பக்கம் 200 மீட்டர் தூரத்தில் 2 வீடுகள் இருக்கிறது என்று கணினி வரைபடம் மூலம் தெரிய வருகிறது. கூகுள் வரைபடத்தில் வீடு இருக்கிறதா என்று பார்த்த போது 6 வீடுகள் இருக்கிறது. மேற்குப் புறத்தில் 189 மீட்டர், கிழக்கு புறத்தில் 167 மீட்டர், வடக்குப் புறத்தில் 23 மீட்டர், 130 மீட்டர் தெற்குப் புறத்தில் 51-வது மீட்டர் மற்றும் 127-வது மீட்டரில் இத்தனை வீடுகள் கூகுள் வரைபடத்தில் காட்டப்பட்டிருக்கிறது. சட்ட விதி

முறைக்கு மீறி இருப்பதனால் இக்குவாரிக்கு சட்டபடி அனுமதி கொடுக்கக்கூடாது. அல்ட்ரா ரெடிமிக்ஸ் குவாரியைச் சுற்றி 300 மீட்டர் சுற்றளவில் தொழிலாளர்களுடைய தற்காலிக/நிரந்தர குடியிருப்பு இருக்கக்கூடாது. ஆனால் தற்போது பல குடியிருப்புகள் இருக்கிறது. காற்றாலை அதிகமாக இப்பகுதியில் இருக்கிறது. இந்திய மின்சார சட்டம்-1956 83/2-ன் விதிப்படி 300 மீட்டர் சுற்றளவில் மின் இணைப்பு, மின் கம்பி, உயர் மின் அழுத்த கம்பி, மின்மாற்றி ஆகியவை இருக்கக்கூடாது. காரணம், வெடி வைக்கும் போது மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் பாதிப்பு ஏற்படும். 300 மீட்டர் (1000 அடி) தூரத்தில் இருந்தால் குவாரி அமையக்கூடாது. குவாரியின் கிழக்குப் பகுதியில் 2 காற்றாலைகளும், தெற்குப் பகுதியில் 1 காற்றாலையும் அமைந்திருக்கிறது. எனவே, சட்டபடி அனுமதி கொடுக்க முடியாது. மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையம் 10.02.2023-ல் காற்று, ஒலி, மணல், நீர் ஆகியவற்றை ஆய்வு செய்ய அனுமதி கொடுத்தார்கள். ஆனால் அடிப்படை கண்காணிப்பு காலம் 01.12.2022 முதல் 28.02.2023 வரை. ஆனால் கிட்டத்தட்ட 70 நாட்களுக்கு முன்னதாக ஆய்வு நடத்தப்பட்டதாக சொல்கிறார்கள். அது சட்டபடி தவறானது. 6 சக்கரம் வாகனங்களுக்கு 18 டன், 10 சக்கர வாகனங்களுக்கு 28 டன், 14 சக்கர வாகனங்களுக்கு 48 டன் வரைதான் பாரம் ஏற்றிச் செல்ல வேண்டும் என்பது விதி. 1 டன் அதிகமாக ஏற்றினாலும் ரூ.20,000 அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்று விதி உள்ளது. RTO சொல்கிறார்கள். ஆனால் இங்குள்ள உள்ளூர் கிராமப்புற சாலைகளில் 90 டன் வரை ஏற்றி செல்கிறார்கள். பெரும்பாலும் மக்களுடைய வரிப்பணம் 20 சதவீதம் கிராமப்புற சாலைகள், மாநில அரசினுடைய சாலைகள், மத்திய அரசினுடைய சாலைகளுக்கு செலவிடப்படுகிறது. 8 வருடங்கள் சாலை சீராக இருக்க வேண்டும். ஆனால், 3 மாதங்கள் கூட சாலைகள் இருப்பதில்லை. யாரோ ஒருவர் வருமானம் ஈட்டுவதற்கு எல்லா மக்களுடைய வரிப்பணமும் வீணாகிறது. கல் குவாரி தொழிலாளர்களுக்கு முறையான பாதுகாப்பு இல்லை. ESI, PF , காப்பீடு திட்டம் போன்ற எந்தவிதமான சலுகைகளும் இல்லை. எங்கள் போராட்டம் மூலம் 20 லட்சம் ரூபாய்

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு கிடைத்துள்ளது. காற்றாலை, தொழிலாளர் குடியிருப்பு, கூகுள் படம் ஆதாரம் இருப்பதால் அல்ட்ரா ரெடிமிக்ஸ் குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது. அடுத்து கதிரேசன் கல் குவாரி 172, 173-ல் அமையவிருக்கிறது. தெற்குப் புறத்தில் 270 மீட்டர் தூரத்திலும், 250 மீட்டர் தென் மேற்குப் பகுதியிலும், வடமேற்குப் பகுதியில் 60-வது மீட்டரில் புல எண்-174-ல் ஒரு வீடும், வடக்கில் 173-1, 192-ஏ, 194- ஏ ஆகிய புலத்தில் வீட்டு மனைகள் உள்ளன. புல எண்-164-ல் குவாரியை ஒட்டி 30 மீட்டரில் பெருமாள் கோவில் உள்ளது . கிழ புற பகுதியில் வீடுகள் உள்ளது. மேற்கில் 280-இ, 223ஏ-ல் ஒரு வீடும் மற்றும் 168, 178, 174, 173, 208, 164, 190 ஆகிய கல் குவாரியைச் சார்ந்த புலங்களில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் உள்ளது. கூகுள் படத்தில் மேற்குப் பகுதியில் புல எண்-163, 169, 191 ஆகியவற்றில் வீடுகள் இருக்கின்றன என்பதை கூகுள் வரைபடங்கள் காட்டுகின்றன. வீடுகளை பொறுத்தவரை வடக்குப் பகுதியில் 25, 29 மீட்டரிலும் கிழக்குப் பகுதியில் 281, 192 மீட்டரிலும், வடமேற்கு பகுதியில் 191 மீட்டரிலும், தெற்குப் பகுதியில் 124, 207 மீட்டரிலும், மேற்குப் பகுதியில் 193 மீட்டரிலும் என மொத்தம் 11 வீடுகள் இருக்கின்றன. அனைத்து புலங்களிலும் வீடுகள் மற்றும் வீட்டு மனைகள் இருக்கின்றது. காற்றாலைகளை பொறுத்தவரை மேற்கில் 1, வட கிழக்கில் 1, என்று 209-ஏ ஆவணத்தில் காட்டப்பட்டிருக்கிறது. மேற்குப் பகுதியில் 20 மீட்டரில் மின் இணைப்பு இருக்கிறது என்று கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் அளித்துள்ளார். மின் இணைப்பு இருந்தால் 50 மீட்டர் தள்ளி தான் குவாரி பணி செய்ய வேண்டும் நடைமுறையில் அப்படி இருக்கிறதா என்பதை அரசு கண்காணிக்க வேண்டும். தொழிலாளர் குடியிருப்பு, காற்றாலை, மின் இணைப்பு போன்றவைகள் இருக்கின்றன. பல்வேறு விதிமீறல்கள் உள்ளன. புல எண் 168, 174, 175, 208, 164, 190 ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டுமனைகள் உள்ளன. FMB, VAO அறிக்கை, கிராம வரைபடம், கணினி வரைபடம், கூகுள் வரைபடம் மற்றும் 300 மீட்டர் சுற்றளவில் தற்காலிக தொழிலாளர் குடியிருப்பு ஆகியவை உள்ளன. நெடுஞ்சாலை விரைவில் குவாரி அமையக்கூடிய புலத்திற்கு வடக்குப்

பகுதியில் 100 மீட்டரில் அமையவிருப்பதாக கிராம நிர்வாக அலுவலர் சான்றழித்துள்ளார். இக்குவாரி அமையக்கூடிய இடத்தில் இத்தனை விதிமீறல்கள் இருப்பதால் சட்டபடி இயக்குவது தவறு. இந்த கருத்துக் கேட்புக் கூட்டம் நடக்கக்கூடிய இடையர்பாளையம் கிரமத்தில் அல்ட்ரா ரெடிமிக்ஸ் நிறுவனத்திற்கும் மற்றும் கதிரேசன் குவாரிக்கு அனுமதி வழஙக்கக்கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

7. **திரு. தியாகராஜன், காரச்சேரி.**

என் பெயர் தியாகராஜன், நான் லாரி தொழில் செய்து வருகிறேன். நான் டிப்ளேமோ படித்துள்ளேன். படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைப்பதில்லை. லாரி ஓட்டினால் தான் வருமானம் ஈட்ட முடியும். பல குடும்பங்கள் பயனடைய வாழ்வாதாரம் உயர இந்த குவாரிக்கு லைசென்ஸ் வழங்கலாம்.

8. **திரு. ஹரி, காரச்சேரி.**

என் பெயர் ஹரி. நான் காரச்சேரியில் கிராமத்தில் வசிக்கிறேன். நான் லாரி வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த குவாரிக்கு லைசென்ஸ் கொடுத்தால் எங்களுக்கு வேலை கிடைக்கும். ஆகவே தாராளமாக அனுமதி கொடுக்கலாம்.

9. **திரு. சக்திவேல், பெரியகுயிலி.**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் சக்திவேல். நான் தற்பொழுது டிகிரி முடித்துள்ளேன். கல்லுரி வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு ஆகியும் சரியான கம்பெனி கிடைக்காமல் வருமானம் இல்லாமல், வேலை வாய்ப்பு கிடைக்காமல் ஒரு வருட காலமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த குவாரிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டால் புதிதாக லாரி வாங்கித் தொழில் அமைக்கலாம். படித்தும் வேலைக்கு சென்றால் சம்பளம் 1000 முதல் 12000 வரை தான் கிடைக்கும். அதை வைத்து இப்போதைய சூழ்நிலையில் குடும்பம் நடத்த முடியாது. எனவே, அதிக வருமானம் ஈட்ட வேறு தொழில் செய்ய வேண்டியிருக்கிறது.

ஆகவே, இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் பயனடையலாம்.

10. **திரு. சரண், பெரியகுயிலி.**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் சரண். நான் லாரி வைத்துள்ளேன். இடையர்பாளையம், பொன்னாகாணி பகுதியில் கல் எங்கேயும் கிடைப்பதில்லை. தூரமாக சென்று கல் எடுக்க வேண்டியுள்ளது. கல் வரத்து குறைவானதால் கிரஷர் மெட்டீரியல் இந்த பகுதியில் சரிவர கிடைப்பதில்லை. கிரஷருக்கு கல் கிடைக்காத காரணத்தினால் மெட்டீரியல் தட்டுபாடாக உள்ளது. அனுமதி கிடைத்தால் எங்களுடைய வாழ்வாதாரம் நன்றாக இருக்கும்.

11. **திரு. வெங்கடாச்சலம், பச்சாபாளையம்**

என் பெயர் வெங்கடாச்சலம். நான் பச்சாபாளையம் கிராமத்தில் உள்ள குவாரிக்கு அருகில் குடியிருக்கிறேன். கம்ப்ரஷர், ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்துள்ளேன். எங்கள் வாழ்வாதாரமே இந்த குவாரியை நம்பித்தான் உள்ளது. கல் குவாரியை நம்பி தான் ஒருவர் பின் ஒருவராக தொழில் நடத்தி இதன் மூலம் வருமானம் பெற்று வாழ்கிறோம். வெளி ஊர்களில் இருந்து இங்கு வந்து லைசென்ஸ் கொடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு சிலர் செல்கின்றனர். சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தான் இங்கு குவாரித் தொழில் நடைபெற்று வருகிறது. எங்களுக்கு தொழில் வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு இந்த கல் குவாரிக்கு உரிமம் கொடுத்து எங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவவும். வாய்ப்பு கொடுத்த எல்லோருக்கும் குறிப்பிட்ட நேரம் மட்டுமே பேசுவதற்கு வாய்ப்பு வழங்க வேண்டும். அனைவருக்கும் நன்றி.

12. **திரு. சரவணன், இடையர்பாளையம்.**

என் பெயர் சரவணன். கல் குவாரிக்கு அருகில் தான் என் குடியிருப்பு இருக்கிறது. கல் குவாரிக்கு லைசென்ஸ் கொடுக்கலாம். எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதை நம்பித்தான் எங்கள் வாழ்வாதாரம் உள்ளது.

13. <u>திரு. சத்தியமூர்த்தி, செட்டிபாளையம்</u>

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் சத்தியமூர்த்தி. நான் செட்டிபாளையம் பகுதியைச் சார்ந்தவன். ஒரு சில வருடங்களுக்கு முன்பு தமிழக அரசு அரசாணை ஒன்று வெளியிட்டது. ஆற்று மணல் எடுக்கக்கூடாது. நீர்நிலைகள் பாதிக்கிறது என்று ஆற்று மணலுக்கு தடை விதிக்கப்பட்டதால் அதற்கு மாற்றாக பாறை மண் பயன்படுத்த மூல பொருள் கல் குவாரியில் இருந்து கிடைக்கிறது. கல் குவாரிக்கு அனுமதி வாங்குவது மிகவும் சிரமமாக இருக்கிறது. கல் குவாரிக்கு அனுமதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால் உற்பத்தி குறைகிறது. மூலப்பொருள் உற்பத்தி குறைவதனால் அதற்குண்டான தேவை அதிகரிக்கிறது. விலை ஏற்றம் தவிர்க்க முடியாதது. கோவை மாவட்டம் நூல் தொழிலை முக்கியமான தொழிலாக கொண்டிருந்தது. இன்று கட்டுமானத்துறையை நம்பி நிறைய குடும்பங்கள் இருக்கின்றன. கட்டுமானத்துறைக்கு அடிப்படையான மூலப்பொருள் (M-sand, P-sand, jelly, gravel) கல் குவாரியில் இருந்துதான் கிடைக்கிறது. வீடு கட்டும் தொழில், பெரிய தொழிற்சாலை கட்டும் போது மூலப்பொருள் கிடைக்காத காரணத்தினால் அதிகமான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்க நேரிடுகிறது. ஒரு காலத்தில் கட்டிட தொழிலாளர்கள் வாரம் 6 முதல் 7 நாட்கள் இரவு பகலாக வேலை செய்தனர். மூலப்பொருள் குறைவு, விலை வாசி ஏற்றத்தால் தற்போது வேலை வாய்ப்பு குறைந்துவிட்டது. நிலைமை தற்போது மாறிவிட்டது. இவர்களை நம்பி இருக்கின்ற இளைய தலைமுறையினரின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக இருக்கிறது. கல் குவாரி தொழிலை வைத்து வருமானம் ஈட்டி குடும்பங்களை காப்பாற்றுகிறார்கள். கட்டுமான தொழிலாளர்கள் வேறு வேலைக்கு செல்ல வழியில்லை. திரு.முகிலன் அவர்கள் காற்றாலைக்கு எதிராக போராடியவர் இன்று கல் குவாரிக்கு எதிராகவும் காற்றாலைக்கு ஆதரவாகவும் பேசுகிறார். இதை சார்ந்து நிறைய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலாளர்களும் லாரி வைத்திருக்கிறார்கள். லாரியில் இருந்து ஸ்பேர் பார்ட்ஸ் மற்றும் கட்டுமான தொழிலில் ஈடுபடுகிறார்கள். அதிகமான வேலை

வாய்ப்பிற்கான வழிவகைகள் இருக்கிற காரணத்தினால் இந்த கல் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

14. **திரு. மகேந்திரன்**

என் பெயர் மகேந்திரன். நான் கட்டிடத்தொழில் செய்து வருகிறேன். கல் குவாரி செயல்படும்போது வாரத்தில் 6 நாட்கள் வேலை கிடைத்துக்கொண்டிருந்தது. கல் குவாரிகள் செயல்படாததினால் வாரத்தில் 3 நாட்கள் வேலை கிடைப்பதே சிரமமாக இருக்கிறது. கல்வரத்து குறைவாக இருக்கின்ற காரணத்தால் வேலைக்குச் சென்று திரும்பி வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனால், கல் குவாரிக்கு விரைவில் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு.சதீஷ், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள்.

மனுக்களின் எண்ணிக்கை : 2

மேற்கூறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
கோயம்புத்தூர் தெற்கு

மாவட்ட வருவாய் அலுவலர்/
**சீனியர் மண்டல மேலாளர்**
**தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**